கவிதை : பனிக்காலம்

Written by - சித்ரா -
Thursday, 06 December 2018 06:57 - Last Updated Thursday, 06 December 2018 21:35

டிசம்பர் மாதத்து
வீட்டு மாற்றங்கள்
கனக்கத் துவங்கின
மாலை நான்கிற்கே
கவிகின்ற காரிருள்
எடை தாங்காமல் .. ...

இலைகள் உருவி விடப்பட்ட
மரங்கள் நிர்வாணமாய்த் தெருவோரத்தில்
சின்னஞ்சிறு மின்விளக்கு போர்த்திய
கிறித்துவ மரமும் மான் பொம்மைகளும்
கதகதப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாக....

இருளில் மூழ்கிய யாவும்
குபுகுபுவென்று குமிழ் விடுகின்றன
பதற்றத்துடன் இனமறியா அச்சத்தை.....

கை கொடுத்து இழுத்து விட
வந்து விடு வசந்தமே விரைவாக

- சித்ரா - (k_chithra@yahoo.com) -

1 / 1